**கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, கோவை**
**முதல்வர் அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை: மரு.அ.நிர்மலா,MS.,DGO.,**

ந.க.எண்:14640/நி3/2021 நாள்: 16 .12.2021

பொருள்: நிர்வாகம் - கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, கோவை –தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி –IV-ல் 2018-19 மற்றும் 2019-2020-ம் ஆண்டுக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தேர்வு செய்யப்பட்ட திரு.ச.சந்திரசேகர் - பணி நியமனம் செய்யப்பட்டது. – பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை மருத்துவக்கல்வி இயக்குநர் அவர்களின் பணி நியமன ஆணை ந.க.எண்: 38842/E2/5/2020-188/நாள்:07.08.2020
2. சென்னை மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநரக ஆணை ந.க.எண்:31495/E2/2/2020 நாள்:05.08.2020
3. இவ்வலுவலக ஆணை ந.க.எண்:9680/நி3/2020 நாள்:07.09.2020.
4. திரு.ச.சந்திரசேகர்,இளநிலை உதவியாளர் பணிசேர் அறிக்கை நாள்:14.09.2020.

*****

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் வாயிலாக 2018-19 மற்றும் 2019-2020-ம் ஆண்டுக்கு நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணிக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் போட்டி தேர்வின் வாயிலாக திரு.ச.சந்திரசேகர்,இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டும் பார்வை (1) மற்றும் (2)-ல் காணும் ஆணையின் வாயிலாக கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் படி இம்மருத்துவமனை முதல்வர் அலுவலகத்தில் காலியாக இருந்த இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியமர்த்தம் செய்யப்பட்டார். இவர் பார்வை 4-ல் கண்டுள்ள திரு.ச.சந்திரசேகர், இளநிலை உதவியாளர் 14.09.2020 நாளிட்ட அறிக்கையின் படி 14.09.2020 முற்பகல் இப்பணியிடத்தில் சேர்ந்துள்ளார்.

Scanned by CamScanner

எனவே, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் 2018-19 மற்றும் 2019-20-ம் ஆண்டுக்கு போட்டித் தேர்வின் வாயிலாக இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்ட திரு.ச.சந்திரசேகர், இளநிலை உதவியாளர் பணியினை,தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2018-19 மற்றும் 2019-20-ம் ஆண்டு நேரடி நியமனம் தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்டுள்ள நிலுவை வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டதாகும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இவர் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் இணைந்த நாள் ஆன 14.09.2020 முற்பகல் முதல் இவரது தற்காலிக பணியை பணிவரன்முறை செய்து இதன் வாயிலாக ஆணையிடப்படுகிறது.

14/12/21

முதல்வர்

14/12

பெறுநர்,

திரு.ச.சந்திரசேகர்
இளநிலை உதவியாளர்,
கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை,கோவை
-அலுவலக கண்காணிப்பாளர் மூலமாக(சம்பந்தப்பட்ட)

நகல்:

1.இயக்குநர்,மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்,சென்னை-600006
-தகவலுக்காக சமர்பிக்கப்படுகிறது.
2.இயக்குநர்,மருத்துவக்கல்வி இயக்ககம்,கீழ்ப்பாக்கம்,சென்னை-10.
-தகவலுக்காக சமர்பிக்கப்படுகிறது.
3.பணிப்பதிவேடு.

Scanned by CamScanner